DEPOSITION OF WITNESS
In the court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai,
CC. No. 37 of 2014
Prosecution witness: LW- 5/ PW- 3

| | |
|---|---|
| Name | P. சுப்பிரமணி |
| Fathers / Husband name | குழந்தைவேல் |
| Village | திருவள்ளுர் |
| Age | 74 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.03.2026.

முதன்மை விசாரனை நேரம் - 11.30

1. நான் திருவள்ளுர் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிபுரிந்து 31.08.2012ல் பணி ஓய்வு பெற்றேன்.கடந்த 26.10.2011ல் பெரியபாளையம் காவல் நிலைய சட்டம் ஒழுங்கு பிரிவில் உதவி ஆய்வாளராக பணி புரிந்த போது செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுதுமூலமாக புகாரினை பெற்று ஊளுசு எண் 295/2011 வழங்கி முதல் கட்ட விசாரணை முடித்து, 08.11.2011ல் காவல் நிலைய குற்ற எண் 704/2011 பிரிவு 4 TNPHW Act மற்றும் 506(2) இதச வின் வழக்கு பதிவு செய்தேன். என்னால் பதிவு செய்யப்பட்ட புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை முறையே அ.சா.ஆ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

2. அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரமேஷ் மற்றும் சுதாகர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

3. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரை உள்ளவர்களை விசாரணை செய்து. தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி வந்த நிலையில் 05.12.2021ம் தேதி 18.30 மணிக்கு மாமண்டுர் கிராமத்தில் வைத்து, கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கின் விசாரணை முடித்து பிரிவு 4 TNPHW Act மற்றும் 506(2) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

4. சம்பவம் நடைபெற்ற தேதியிலிருந்து 15 நாட்கள் கழித்து தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 21.10.2011 அன்று சம்பவம் நடைபெற்றது. 24.10.2011 அன்று புகார் கொடுக்கப்பட்டது CSR ம் அன்றே வழங்கப்பட்டது.

5. சம்பவம் நடந்த தேதிக்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 20 கிலோமீட்டர் தூரம் இருக்கும். புகார் கொடுத்து 15 நாட்கள் கழித்து முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

6. காலம் 8 ல் புகாரின் விவரத்தை நீங்கள் எழுதவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. புகாரில தவறான வார்த்தையில் பேசினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளார்கள். புகாரின் CSR எண் யார் வழங்கினார்கள் என்றால் நான் தான் வழங்கினேன்.

7. சம்பவ இடத்திற்கு எப்பொது என்றைய தினம் சென்று விசாரணை செய்தீர்கள் என்றால் 08.11.2011 காலை 8 மணிக்கு சென்று விசாரணை செய்தேன். யார் யார் விசாரணை செய்தீர்கள் என்றால் செல்வி, ரமேஷ், அபூர்வம்மாள், சுதாகார் ஆகியோர்களை விசாரணை செய்தேன்.

8. பார்வை மகசரில் உள்ள குறிப்பிட்டு சின்னகோவிந்த ரெட்டி, ராதா, கோபல் ரெட்டி, வேனு ஆகியோர்களை சாட்சிகளாக சேர்க்கப்படவில்லை என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. இந்த வழக்கின் FIR, பார்வை மகசர், மாதிரிவரைபடம, குற்ற இறுதியறிக்கை என்னால் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

9. பார்வை மகசர், மாதிரிவரைபடம் என்றைய தினம் தயார் செய்யப்பட்டது என்றால் 08.11.2011 வாதியின் வீட்டில் வைத்து தயார் செய்யப்பட்டது. சம்பவம் நடைபெற்ற இடத்தில் கிராம நிர்வாக அலுவலர், கிராமஉதவியாளர் ஆகியோர்களிடம் விசாரணை செய்தீர்களா என்றால் இல்லை.

10. சம்பவம் நடைபெற்ற இடத்தின் அருகில் இருந்த பொதுமக்களிடம் விசாரணை செய்தீர்களா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்ற வீட்டை சுற்றி எத்தனை வீடுகள் இருந்தது என்றால் ஞாபகம் இல்லை.

11. புகார்தாரரரின் வீடு யாருடைய வீட்டு பக்கத்தில் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.புகார் தாரர் வீட்டில் எத்தனை நபர்கள் வசித்து வந்தார்கள் என்றால் புகார்தாரர் மற்றும் அவருடைய கணவர் ஆகியோர் வசித்து வந்தார்கள்.

12. எரிந்ததாக சொல்லப்பட்ட வீட்டை, புகைப்படம் மற்றும் வீடியோ எதெனும் எடுத்தீர்களா என்றால் இல்லை. கொளுத்தியதாக தான் சொன்னார்கள் ஆனால் கொளுத்தவில்லை.

13. மேற்படி சம்பவம் எதுவும் நடக்கவில்லை, நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை. சாட்சியம் முடிவுற்ற நேரம் 11.55